# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 266/பே/2015

ஆணை எண். 105/2017

நாள் : 06/05/2017

திரு. மா.கு.முருகவேல்சாமி,
73, பேருந்து நிலையத் தெரு,
திருவேங்கடம், திருநெல்வேலி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருவேங்கடம் பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம் – 627 719 – எதிர்மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், திருவேங்கடம் பேரூராட்சியைச் சேர்ந்த திரு மா.கு. முருகவேல்சாமி என்பவரது 26.10.2015 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 266/2015 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது :-

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், திருவேங்கடம் பேரூராட்சியைச் சேர்ந்த திரு மா.கு. முருகவேல்சாமி தனது 26.10.2015 நாளிட்ட முறையீட்டு மனுவில் திருவேங்கடம் பேரூராட்சியில் புல எண்.1341/6–ல் இருந்த வன்னியன் கிணறு மற்றும் அதிலிருந்த குளியல் அறைகள் அழிக்கப்பட்டு அந்த இடத்தில் திரு முத்தையா சோழகர் என்பவர் வீடுகட்டி பல்லாண்டுகளாக குடியிருந்து வருவதாகவும் அதற்கு சொத்துவரியும் விதிக்கப்பட்டு பேரூராட்சி வரி வசூலித்து வருவதாகவும் முறையிட்டுள்ளார்.

2. இம்முறையீடு குறித்து திருவேங்கடம் பேரூராட்சி செயல் அலுவலரிடம், முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண். 266/2015–1 / நாள் 17.11.2015–ன் வாயிலாக விளக்க அறிக்கை கோரப்பட்டது. அதன்படி செயல் அலுவலர் கடித ந.க.எண்.217/2015, நாள் 27.11.2015–ல் பின்வருமாறு விளக்கம் அளித்துள்ளார்:-

*"மனுதாரர் மனுவில் கூறப்பட்டுள்ள இடத்தை நேரில் ஆய்வு செய்தபோது ஓட்டுக்கூரை வேயப்பட்ட தற்காலிக கட்டிடம் உள்ள இடத்தில் கிணறு மற்றும் குளியலறைகள் இருந்ததற்கான அடிச்சுவடுகள் ஏதும் இல்லை. மேலும் கிணறு மற்றும் குளியலறைகள் இருந்ததற்கான ஆவணங்கள் இப்பேரூராட்சியில் இல்லை. மேலும் விசாரணை செய்ததில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் அந்த கிணறு உபயோகமின்றி இருந்ததாக*

*தெரியவருகிறது. எனவே, 30 ஆண்டுகளுக்கு முந்தைய ஆவணங்கள் என்பதால் மேற்படி புகாருக்கு பதிலளிக்க வாய்ப்பில்லை " என்று தெரிவித்துள்ளார்.*

3. இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண். 266/2015, நாள் 16.12.2015–ன் வாயிலாக முறையீட்டு மனுதாரர் 30.12.2015 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அன்று நடைபெற்ற விசாரணையின்போது தனது எழுத்து மூலமான வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார். அவ்வாக்குமூலத்தில், கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

> *"நில அளவைத்துறை அலுவலர்களை அழைத்து, வருவாய்த்துறை ஆவணங்கள், மேற்படி நபரிடமிருக்கும் மேற்படி நிலப்பகுதிக்குரிய கிரையம் பத்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் நிலப்பகுதியை அளந்திருந்தால் கிணறும், குளியலறைகளும் இருந்த நிலப்பகுதி மேற்படி நபருக்கு உரிமையுடையது அன்று என்னும் உண்மை வெளிப்பட்டிருக்கும்.*
>
> *குளியலறைகளைப் பொறுத்தவரை, அவை இப்பேரூராட்சி சிற்றூராட்சியாக இருந்த காலத்தில் (1955 இன் நடு அல்லது பிற்பகுதி) கட்டப்பட்டவை. அவை தொடர்பான நிரந்தர ஆவண்ங்களான M Book போன்ற பிற பொருத்தமான ஆவணங்களைப் பெற்று அவற்றின் மூலம் குளியலறைகள் இருந்ததை உறுதி செய்யலாம். அவ்வாறு செய்யாமல் "ஆவணங்கள் இல்லை " என்று கூறுவது ஏற்கத் தக்கதன்று. கிணறும் குளியலறைகளும் இருந்தன என்பதை உறுதி செய்த பிறகு அவை இருந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அதிகாரப்பூர்வமற்ற தற்காலிக கொட்டகையை அகற்ற உரிய நடவடிக்கையை தொடர்புடைய நபர் வாயிலாகவோ, அது நடக்கவில்லை எனின், பேரூராட்சியோ மேற்கொள்ளலாம் குடியிருப்பு முதன்மை கடைவீதி ஆகியவற்றிற்கிடையே உள்ள அக்கொட்டகையில் சுண்ணாம்புச் சூளை உள்ளது. அதில் நெருப்பு எரிவதால் அது அருகே உள்ள பகுதிகளுக்குப் பரவும் ஆபத்தும், புகை வருவதால் சுற்றுப்புறச் சூழ்நிலைக்குக் கேடும் ஏற்பட்டிருக்கின்றன.*
>
> *அழிக்கப்பெற்ற கிணற்றையும், குளியலறைகளையும் மீண்டும் பெற வாய்ப்பு இல்லாத நிலையில் அவற்றை மதிப்பிட்டு அதற்கான தொகையை மேற்படி நபரிடமிருந்து உரிய இழப்பீட்டைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளலாம். " என்றும் தெரிவித்தார்.*

4. 31.12.2015 நாளிட்ட முறைமன்ற நடுவ அறிவிப்பாணை வாயிலாக புல எண்.1341 என்ற நிலத்தை தணிக்கை செய்து அந்த நிலத்தில் இருந்த பொது கிணறு அழிக்கப்பட்ட விவரம் மற்றும் தற்போதைய ஆக்கிரமிப்பின் தன்மைக் குறித்து விரிவான அறிக்கை அனுப்பிட திருவேங்கடம் வட்டாட்சியருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி திருவேங்கடம் வருவாய் வட்டாட்சியர் தனது 19.01.2016 நாளிட்ட கடிதத்தில் திருவேங்கடம் கிராமம் புல எண்.1341/3B என்பது பூஸ்தி கிணறு என கிராம நத்தம் அடங்கலில் தாக்கலாகியுள்ளது என்றும் மேற்படி புல எண்ணில் தற்போது கிணறு இல்லை என்றும் மேற்படி புல எண். ரயத்து புஞ்சை பழைய எண்.1341/3 லிருந்து நத்தத்திற்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றும், நத்தம் சர்வே எண் புல எண்.1341/6 என்பது காலிபுஞ்சை என கிராமக் கணக்கில் தாக்கலாகியுள்ளது என்றும் தனியாருக்கு பாத்தியப்பட்டது என்பதால் ஆக்கிரமிப்பு அகற்ற இயலாத நிலை உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

5. 08.03.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின்போது செயல் அலுவலர் பின்வருமாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

> *" மனுதாரர் புகாருக்கான ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை. மேலும் குளியல் அறை மற்றும் கிணற்றுக்கான இடம், கிராம நிர்வாக அலுவலரின் கணக்கில் பூஸ்தி கிணறு என்று காண்பிக்கப்பட்டுள்ளது. பூஸ்தி கிணறு என்றால் பட்டா கிணறு என்று அர்த்தமாவதால் பேரூராட்சிக்கு உட்பட்ட கிணறு அல்ல என்பது உறுதியாகிறது.*

இந்நிலையில் மனுதாரர் 1955–ஆம் ஆண்டு நடைபெற்றதாக கூறப்படும் நிகழ்வுக்கு தற்போது எந்தவித ஆவணங்கள் இன்றி புகார் அளித்துள்ளார். யூகத்தின் அடிப்படையில் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க இயலாது என்று மனுதாரருக்கு பலமுறை பதில் அளிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தவிர வேறு நபர்கள் யாரும் நேரில் வந்து புகார் அளிக்கவில்லை. மனுதாரர் அந்த இடத்திற்கு அருகே புதியதாக வணிக வளாகம் கட்டி வருகிறார். அதற்கான பாதையில் ஆக்கிரமிப்பாளர் முத்தையா சோழகர் என்பவருக்கும் பாத்தியப்பட்டதாக கூறப்படுகிறது. எனவே, இந்த புகாரை பொது நலன் கருதி கூறப்பட்டதாக கருத்தில் கொள்ளாமல் இரண்டு தனி நபர் விரோதத்தால் ஏற்பட்டதாகவும் கொள்ளலாம்; எனத் தெரிவித்தார். ”

6. இந்நிலையில் இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண். 266/2015, நாள் 11.03.2016–ன் வாயிலாக மேற்படி புல எண். 1341/6 ல் சுண்ணாம்பு காளவாசல் ஒன்று செயல்பாட்டில் உள்ளதால் தீவிபத்து மற்றும் சுற்றுச்சூழல் மாசு ஏற்படுத்தப்படுவதாக இம்முறைமன்ற நடுவ விசாரணையின்போது தெரிய வந்ததால் இது சம்பந்தமாக விசாரணை மேற்கொண்டு உரிய விசாரணை அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு திருநெல்வேலி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், அவர்களுக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி, திருநெல்வேலி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய கடித எண். கோ.தொநு–031(003)/2016, நாள் 25.03.2016 ல் கீழ்க்கண்டவாறு தனது ஆய்வறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:-

“ குறிப்பிட்ட சுண்ணாம்பு காளவாசலானது திரு முத்தையா அவர்களால் நடத்தப்பெற்று வருகின்றது. ஆய்வின்போது, தொழிற்சாலை இயக்கத்தில் இல்லை என்பது அறியப்பட்டது.

குறிப்பிட்ட சுண்ணாம்பு காளவாசலுக்கு அருகிலேயே 10 மீட்டர் தொலைவிற்குள் வேறு ஒரு சுண்ணாம்பு காளவாசல் திரு செல்வராஜ் அவர்களால் நடத்தி வரப்பெறுவதும் அறியப்பட்டது. ஆய்வின்போது, தொழிற்சாலை இயக்கத்தில் இருந்தது.

குறிப்பிட்ட 2 சுண்ணாம்பு காளவாசல் தொழிற்சாலைகளுக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 மற்றும் காற்று(மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981–ன் கீழ் இசைவாணைகள் எதுவும் வழங்கப்படவில்லை.

தொழிற்சாலைகள் அருகிலேயே குடியிருப்புகள் வணிக நிறுவனங்கள் ஆகியவையும் செயல்பாடுகளில் உள்ளதாக அறியப்பட்டது.

மேற்குறிப்பிட்ட சுண்ணாம்பு காளவாசல்களின் மீது கடந்த ஓராண்டாக எவ்விதமான புகார் மனுவும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை.

ஆய்வின்போது செயல்அலுவலர், திருவேங்கடம் பேரூராட்சி, திருவேங்கடம் மற்றும் மனுதாரரான திரு மா.கு. முருகவேல்சாமி, ஆகியோர்களிடமிருந்து உரிய கருத்துக்கள் நேரில் பெறப்பட்டன.

மேலும், தலைவர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், சென்னை அவர்களது குறிப்பாணை எண்.தநாமாகவா/பி&டி/16072/2014, நாள் 18.09.2014ன் படி தொழிற்சாலை–களின் மீது செயல் அலுவலர், திருவேங்கடம் பேரூராட்சி, திருவேங்கடம் அவர்கள் உரிய உள்ளாட்சி மற்றும் பொது சுகாதாரச் சட்டங்களின் கீழ் மேல் நடவடிக்கை எடுத்திட இவ்வலுவலக கடித எண்.கோ. தொநு–031/003/2016, நாள் 23.03.2016 ன் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது ” என்று தெரிவித்துள்ளார்.

7. மேலும், இந்நேர்வில் இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.266/2015, நாள் 07.04.2016 வாயிலாக மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் கடித எண்.031(003)/2016, நாள் 23.03.2016 ன் படி மேற்கண்ட தொழிற்சாலையின் மீது பேரூராட்சி நிர்வாகத்தால் உள்ளாட்சி நிறுவன மற்றும் சுகாதார சட்டங்களின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரத்தினை அனுப்பிவைத்திட செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி, செயல் அலுவலர் தனது ந.க.எண்.94/2016, நாள் 18.08.2016ல் திருவேங்கடம் பேரூராட்சியில் புல எண்.1341/6ல் உள்ள இடத்தில் சுண்ணாம்பு காளவாசல் உள்ளது என்றும் மேற்படி சுண்ணாம்பு காளவாசல் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து இசைவாணைகள் ஏதும் பெறப்படவில்லையாதலால், பேரூராட்சி மூலம் வழங்கப்படும் தொழில் உரிமம் ரத்து செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து அதற்கான தொழில் உரிம ரத்து உத்திரவு நகலினையும் சமர்ப்பித்துள்ளார்.

8. இந்நேர்வில் புல எண்.1341/6 கிரயம் குறித்து கிரயதாரர் விவரம் தொடர்பான ஆவணம் எதுவும் இல்லை என முறையீட்டு மனுதாரர் தெரிவித்ததன் அடிப்படையிலும், மேற்படி கிணறு பூஸ்தி கிணறு என திருவேங்கடம் வட்டாட்சியர் அறிக்கை சமர்ப்பித்ததன் அடிப்படையிலும், குடியிருப்புகளுக்கிடையிலிருந்த சுண்ணாம்பு காளவாசலின் தொழில் உரிமம் ரத்து செய்துவிட்ட நிலையிலும் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு குறித்து மேலும் மேல் நடவடிக்கையினை கைவிடலாம் எனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு, மே திங்கள், 6–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

(முத்திரை: தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை–600 032)

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(கையொப்பம்) 15/5/17

செயலாளர்.

155. 15.5.17

பெறுநர்

1. திரு. மா.கு.முருகவேல்சாமி,
73, பேருந்து நிலையத் தெரு,
திருவேங்கடம், திருநெல்வேலி மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
திருவேங்கடம் பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம் – 627 719

3. மாவட்ட மாசு கட்டுப்பாட்டு வாரியம்,
திருநெல்வேலி மாவட்டம்,
திருநெல்வேலி.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்